DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 128-2025**

**Deposition of Witness for Prosecution : P.W. 20**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆரோக்கியராஜ் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 25.02.2026

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் பெரம்பலூர் மாவட்டம் பெரம்பலூர் உட்கோட்ட துணை கண்காணிப்பளாராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 2020ம் வருடம் வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது 11.08.2020ந் தேதி மாலை இவ்வழக்கின் வாதி கொடுத்த புகாரை பெற்று நிலைய பொறுப்பில் இருந்த குமார் என்பவர் நிலைய குற்ற எண் 743/2020 வழக்கு பதிவு செய்து என் பார்வைக்கு வைத்ததன்பேரில் நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாஸ்கர், பழனிவேல் ஆகியோர் முன்பு இரவு 7.30 மணிக்கு இரவு அங்கு அருகில் இருந்த சாலை ஓரத்தில் இருந்த விளக்கு வெளிச்சத்தில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் வரைத்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.13** ஆகும். பார்வை மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் பிரேத்தின் கீழ் இருந்த இரத்தம் தோய்ந்த மண் சிறிதளவு அதன் அருகில் இருந்த இரத்தம் தோயாத மண் சிறிதளவு எடுத்து அதே சாட்சிகள் முன்பு மகரில் கைப்பற்றினேன். பின்னர் சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்களுக்கு

சம்மன் சார்வு செய்து சாட்சிகள் தங்கவேல், செல்வராஜ், ஜோசப் ஸ்டாலின், நம்பிராஜா, ஜெபஸ்டின் ஆகிய சாட்சிகளை பஞ்சாயத்தார்கள் முன்பு விசாரித்து பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.14** ஆகும். பின்னர் சாட்சிகள் ரவிந்தர், ஜாஸ்மின் மேரி, மைக்கல் ராஜ், பார்வை மகசர் சாட்சிகள் பாஸ்கர், பழனிவேல், பிரேத விசாரணை சாட்சிகளான தங்கவேல், செல்வராஜ், ஜோசப் ஸ்டாலின், நம்பிராஜா, ஜெபஸ்டின் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் பிரேதத்தை பிரேத விசாரணை அறிக்கை முடித்து இரவு 10.00 மணிக்கு பிரேதத்தை அரசு மருத்துவமனை நாகப்பட்டினத்திற்கு அனுப்பி வைத்தேன். 12.08.2020 அன்று பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய மருத்துவரிடம் அடையாளம் காட்ட காவலர் பிரகாஷ் அவர்களுக்கு கடவு சீட்டு கொடுத்து அனுப்பி வைத்தேன். அன்றைய தினமே எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் எதிரி முகேஷ் காலை 9.00 மணிக்கு வேளாங்கண்ணி ரயில்வே நிலையம் அருகில் உள்ள மாதா சமுதாய கூடம் அருகில் இருந்தவரை கைது செய்து விசாரிக்க அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் கந்தசாமி, முருகேசன் ஆகியோர்கள் முன்பு பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான என்னை அழைத்து சென்றால் வேளாங்கண்ணி ரயில் நிலையம் அருகில் உள்ள புங்கை மரம் அருகில் சருகை போட்டு மறைத்த வைத்துள்ள கத்தியை எடுத்து ஆஜர்படுத்துவேன் என்றார். மேலும் சதீஸ்குமார், சாம்சங் பிராங்களின் ஆகியோர்களை குத்திய சம்பவ இடத்தை அடையாளம் காட்டுவேன் என்றார். அந்த அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதே சாட்சிகள் முன்பு எதிரி எடுத்து ஆஜர் செய்த சுமார் 25.5 செ.மீ நீளமுள்ள பட்டன் கத்தி ஒன்று அது மடக்கும் நிலையில் உள்ளது அதை மகசரில் கைப்பற்றினேன். அந்த

கத்திதான் என்னிடம் காட்டப்படும் சான்று பொருள் ஏற்கனவே அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரியை தகுந்த வழிகாவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அன்றைய தினமே இவ்வழக்கில் காயம்பட்ட சாம்சங் பிராங்களின் அவர்களை மருத்துவமனையில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 13.08.2020 அன்று இவ்வழக்கில் இறந்துபோன சதீஸ்குமார் உறவினர் சந்தோஷ்குமார், வெங்கடேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை செய்த பிரேத்தை அவர்கள் மூலம் அவரின் சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் இவ்வழக்கின் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான கந்தசாமி, முருகேசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் சம்பவ இடத்தில் கைப்பற்றிய தடயங்கள் எதிரியிடம் கைப்பற்றிய கத்தி மற்றும் பிரேதத்தில் இருந்து கைப்பற்றிய இறந்த சதீஸ்குமாரின் உறுப்புகள் ஆகியவற்றை பகுபாய்விற்காக கொரோனா காலம் என்பதால் காலதாமதமாக பகுபாய்வு கூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேலும் சம்பவ இடத்தில் இருந்து CCTV பதிவிறக்கம் செய்த லூர்து ராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் எதிரியால் தாக்கப்பட்டு காயம்பட்ட சாட்சி சாம்சன் பிராங்களின் என்பவரின் விபத்து பதிவேடு பதிவு செய்த மருத்துவர் சுந்தர் காங்கேயம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதே சாட்சிக்கு இறுதி கருத்துரை காயச்சான்று வழங்கிய பாண்டியராஜ் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேதத்தில் இருந்து சேகரம் செய்யப்பட்ட சதீஸ்குமாரின் உடல் உள்ளுறுப்புகளை பகுப்பாய்வு செய்த மருத்துவர் காயத்ரி என்பவரிடம் பிரேத பரிசோதனை உள்ளுறுப்புகளை பகுபாய்வு செய்த உதவி இயக்குநர் தஞ்சாவூர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத விசாரணை செய்த மருத்துவர்

பாண்டியராஜ் அவர்களிடம் இறந்த சதீஸ்குமாரின் இறப்பிற்கான இறுதி கருத்துரை சான்று பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் துரித தபால் எடுத்து சென்ற காவலர் ஆனந்த உடல் உள்ளுறுப்புகளை தடய அறிவியல் ஆய்வகத்திற்கும் பிரேத பரிசோதனை செய்தபோது உடனிருந்து காவலர் பிரகாஷ் என்பவரை விசாரித்தும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த குமார் என்பவரையும் விசாரித்தும் வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் என் விசாரணையை முடித்து 24.01.2021ந் தேதி எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஜான்சன் பார்க் லாட்ஜ் காவல் நிலையத்திலிருந்து 1கி.மீ தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். ஆட்டோவில் வந்தால் 10 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். 11.08.2020 மாலை 6.30 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் இருந்து தகவல் வருவதற்கு முன்பாகவே அ.சா.1 கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான் வழக்கின் வாதி போட்ட தனது மகன் சாம்சன் பிராங்களின் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த பின்பு புகார் எழுதி அங்கிருந்து நிலையம் வந்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. அ.சா.1 புகார் கொடுக்க வந்தபோது நான் காவல் நிலையத்தில் இருந்தேன் என்றால் தற்போது ஞாபகம் இல்லை பொதுவாக மாலை நேரத்தில் சுற்றுலா தளம் என்பதால் ரோந்து பணியில் இருந்திருப்பேன். அ.சா.1 இடம் 11.08.2020 அன்று நான் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை 5 மாதம் கழித்து தான்

விசாரித்து வாக்குமூலம் பெற்றேன் என்றால் சரியல்ல. 24.01.2021ந் தேதி தான் அ.சா.1 ஐ விசாரித்து வாக்குமூலம் வாங்கினேன் என்றும் அதில் கையெழுத்து 24.01.2021ந் தேதி போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல 24.01.2021ந் தேதி போடப்பட்டுள்ள கையெழுத்து மறுவாக்குமூலம் ஆகும். அ.சா.2 சாம்சன் பிராங்களின் என்பவரை நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 11.08.2020 அன்றே மருத்துவமனைக்கு சென்று வாக்குமூலம் எதுவும் பெறவில்லை மறுநாள் தான் வாக்குமூலம் பெற்றேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகின்ற இடத்திற்கு 11.08.2020ந் தேதி 7.30 மணியளவில் சென்றுவிட்டேன். எனக்கு சம்பவம் தொடர்பாக 11.08.2020ந் தேதி எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது என்றால் 6.30 மணிக்கு மேல் உதவி ஆய்வாளர் குமார் மூலம் தகவல் கிடைத்தது. நான் சம்பவ இடம் சென்றபோது ஜான்சன் பார்க் லாட்ஜில் எத்தனை நபர்கள் வேலை பார்த்தார்கள் என்ற விபரத்தை விசாரித்து தெரிந்துகொண்டேன் என்றால் அங்கு எத்தனை பேர்கள் வேலை பார்த்தார்கள் என்று தெரியவில்லை ஆனால் வேலை பார்த்தார்கள். ஜான்சன் பார்க் லாட்ஜில் வேலை பார்த்த நபர்களை நான் இந்த வழக்கில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் ஜான்சன் பார்க் லாட்ஜின் உரிமையாளர் உரிமையாளர் தங்கவேல் என்வரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஜான்சன் பார்க் லாட்ஜிக்கு செல்லவில்லை அதனால் தான் அங்கு வேலை

பார்த்தவர்களை நான் விசாரித்து அவர்களை சாட்சிகளாக இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல நான் விசாரித்தபோது உரிமையாளர் மற்றும் நான் விசாரித்த சாட்சிகள் தான் அங்கிருந்தார்கள் மற்றவர்கள் இல்லை. இந்த வழக்கில் அ.சா.1, 2, 3 நெருங்கிய உறவினர்கள் மற்ற சாட்சிகளான ஜோசப் ஸ்டாலின், தம்பிராஜா, ஜெபஸ்டின் ஆகியோர்கள் அதே தெருவில் வசிப்பவர்கள் என்றால் சரிதான். மேற்கண்ட சாட்சிகள் காவல் நிலையம் வரவழைத்த அங்கு விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சாட்சிகளாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவரது உதவியாளர் ஆகியோர்களை 12.08.2020ந் தேதி அன்று தான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கிராம நிர்வாக அலுவலர் என்னிடம் அவரது அலுவலகத்தில் பராமரிக்கப்படும் மூமண்ட் ரிஜிஸ்டரை ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அதே கிராம நிர்வாக அலுவலர் அவரது உயர் அதிகாரியிடம் போலிசார் விசாரணைக்கு செல்வதற்கு உத்தரவு எதுவும் பெற்று என்னிடம் ஒப்படைத்தாரா என்றால் இல்லை பொதுவாக அவருடைய உயர் அதிகாரி தாசில்தாரிடம் தகவல் தெரிவித்து இதுபோன்ற பணிக்கு அழைப்பது தான் முறை. கிராம நிர்வாக அலுவலர் அவருடைய உயர் அதிகாரிக்கு தகவல் தெரிவித்தாரா என்றால் எனக்கு தெரியாது. கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவருடைய உதவியாளர் இருவரும் அரசு அலுவலர்கள் அதனால் நான் கேட்டுகொண்டதற்கிணங்க அவர்கள் இருவரும் வந்து ஒப்புதல் வாக்குமூலத்திலும் ஆயுதம் கைப்பற்றிய

மகசரிலும் கையெழுத்து போட்டுகொடுத்தார்கள் என்றால் சரியல்ல. கடந்த 2020ம் ஆண்டு கொரோனா காலம் என்பதால் லாட்ஜில் யாரும் தங்கவில்லை சட்டவிரோதமாக அங்கு தங்கியிருந்தால் காவல் துறையால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல முறையான அரசு வழிகாட்டுதல் அடிப்படையில் தங்கும் விடுதியில் தங்கியுள்ளார்கள். எதிரியிடம் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் அ.சா.பொ.1ல் எதிரியின் கைரேகை அதிலுள்ளதா என்பதை அறிய கைரேகை வல்லுநர்களின் ஆய்விற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான் மேற்படி எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கத்தியில் சம்பவ இடத்தில் இருந்து சேகரித்த சருகுகல் மற்றும் மண் படிந்ததால் மேலும் அந்த கத்தியினுடைய கைப்படி மரத்தால் ஆனதாலும் கைரேகை படிய வாய்ப்பு இல்லை என்பதால் அதை கைவிரல் ரேகை கூடத்திற்கு அனுப்ப தேவையில்லை என்தால் அனுப்பவில்லை. எதிரியிடம் இருந்து அ.சா.பொ.1ஐ நான் VAO மற்றும் அவரது உதவியாளர் முன்பாக கைப்பற்றபடவில்லை அதனால் தான் அதை ஆய்விற்கு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவம் இடம் சென்றபோது மைக்கல்ராஜ் என்பவரின் வீட்டு வாசலில் இறந்து கிடந்த சதீஸ்குமார் என்பவரின் உடலுக்கு அடியில் இருந்த இரத்தம் தோய்ந்த மண்ணை ஆய்வுக்கு எடுத்தேன் ஆனால் ஜான்சன் பார்க் லாட்ஜின் வரவேற்பு பகுதியில் உள்ள இரத்தக்கறை படிந்த எந்த சான்று பொருளையும் எடுக்கவில்லை இரத்தக்கறை

படிந்ததிருந்ததற்கான போட்டோக்கள் எடுத்து நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் கொரோனா காலம் என்பதால் சுகாதாரம் கருதி ஜான்சன் பார்க் லாட்ஜில் இருந்து இரத்தக்கறை படிந்தவற்றை போட்டோ எடுக்கவில்லை அதனால் அதை நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை. நான் ஜான்சன் பார்க் லாட்ஜிக்கு செல்லவில்லை அதனால் தான் மேற்குறிப்பிட்ட ஆதரமோ, புகைபடமோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.2 இடமிருந்து இரத்தக்கறை படிந்த ஆடைகள் எதையும் நான் கைப்பற்றபடவில்லை. CCTV கேமரா பொருத்திய கேமரா ஆப்ரேட்டர் லூர்துராஜ் என்பவரை 11.08.2020ந் தேதி மாலை 5.45 மணிக்கு விசாரித்து வாக்குமூலம் வாங்கினேன் என்றால் சரியல்ல. CCTV கேமராவில் இருந்து பதிவிறக்கம் செய்துகொடுத்த காட்சி பதிவுகளில் எதிரி இவ்வழக்கில் இறந்துபோனவரையோ, அ.சா.2 யோ தாக்கியதாக எந்த காட்சி பதிவும் இல்லை என்றால் சரியல்ல அந்த வீடியோ பதிவில் உள்ள காட்சிகளில் பதிவு உள்ளது. அந்த வீடியோ பதிவுகளின் காட்சிகளை நான் ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல கொரோனா காலம் என்பதால் நீதிமன்றம் நடைபெறததால் அதை உடனடியாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்து சான்று பொருளாக தாக்கல் செய்யமுடியவில்லை. 16.12.2020 அன்று தான் அ.சா.2 மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான்.

மருத்துவரின் வாக்குமூலத்தில் தன்னை அடையாளம் தெரிந்த நபர் கத்தியால் அவரது இடது பக்க வயிற்றில் குத்திவிட்டதாக அவரது மனைவி உதவியுடன் சிகிச்சைக்காக வந்தார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மருத்துவர் பாண்டியராஜ் என்பவரை நான் விசாரித்த பெற்ற வாக்குமூலத்தில் அ.சா.2 தன்னை அடையாளம் தெரிந்த நபர் கத்தியால் அவரது இடது பக்க வயிற்றில் குத்திவிட்டதாக அவரது மனைவி உதவியுடன் சிகிச்சைக்காக வந்தார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.2 விபத்து பதிவேட்டில் தன்னை ஒரு அடையாளம் தெரியாத நபர் தீயணைப்பு நிலையம் அருகில் கத்தியால் குத்திவிட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். இறந்துபோன சதீஸ்குமாரின் பிரேத பரிசோதனை அறிக்கையில் அவரது உள்ளுறுப்புகளான இறைப்பை, சிறுகுடல், கல்லீரல், சிறுநீரகம் போன்ற பகுதிகளில் மொத்தமாக சேர்த்து 683மி.கி ஆல்கஹால் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் அரசு அலுவலகமான தீயணைப்பு நிலையம் உள்ளது என்றால் சரிதான். அந்த தீயணைப்பு நிலையம் 24 மணிநேரமும் செயல்பட கூடியது என்றால் சரிதான். அந்த தீயணைப்பு நிலையத்தில் CCTV பொருத்தப்பட்டுள்ளது அதிலுள்ள தகவல்களை பதிவிறக்கம் செய்து நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் அந்த தீயணைப்பு நிலையத்தில் அந்த நேரத்தில் CCTV கேமரா பொருத்தப்படவில்லை. தீயணைப்பு நிலையத்தில் இருந்த அதிகாரிகளிடம் விசாரித்து எந்த

வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரிதான். நான் ஜான்சன் பார்க் லாட்ஜ்க்கோ, தீயணைப்பு நிலையத்திற்கோ சென்று எந்த விசாரணையும் செய்யவில்லை அதனால் தான் இரண்டு இடத்திலும் இருந்த நபர்களை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல தீயணைப்பு நிலையம் சம்பவ இடத்தில் இருந்து கொஞ்சம் தொலைவில் இருப்பதால் பொதுவாக அந்த பகுதியில் மக்கள் தீயணைப்பு நிலையம் அருகில் இடக்குறியீட்டை பயன்படுத்துவார்கள் நான் பார்வை மகசரில் தீயணைப்பு நிலையத்தை குறிப்பிடவும் இல்லை. அ.சா.2 தன்னுடைய விபத்து பதிவேட்டில் தன்னை தீயணைப்பு நிலையம் அருகில் அடையாளம் தெரியதா நபர் தாக்கியதாக சொல்லப்படும் பட்சத்தில் நான் தீயணைப்பு நிலையம் சென்று விசாரணை செய்யபடவில்லை என்றால் அது என் விசாரணைக்கு தேவைபடவில்லை. அ.சா.2 சாம்சன் பிராங்களின் அஇஅதிமுக கட்சியின் நகர செயலாளராக இருந்தாரா என்றால் தற்சமயம் எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொல்வது ்போல் எதிரி இவ்வழக்கில் இறந்துபோன சதீஸ்குமாரை எதுவும் செய்யவில்லை சாம்சன் பிராங்களினுக்கும் இறந்துபோன சதீஸ்குமாருக்கும் பிரச்சனை ஏற்பட்டு இருவருக்கும் சண்டை நடந்தது அதில் குடிபோதையில் இருந்த சதீஸ்குமார் அ.சா.2ஐ தாக்கி காயம் ஏற்படுத்தியுள்ளார் அப்போது இறந்துபோன சதீஸ்குமாரிடம் இருந்து பிடுங்கப்பட்ட ஆயுதத்தின் மூலம் சதீஸ்குமாரை அ.சா.2 தாக்கி காயத்தை ஏற்படுத்தியுள்ளார் அதனால் தான் அவர்

இறந்துபோய்விட்டார் என்று சொன்னால் சரியல்ல. இருவருக்குமான சண்டையில் இறந்துபோன சதீஸ்குமாரை காப்பாற்றுவதற்காக முயற்சி செய்த தமிழ்மொழி தெரியாத எதிரியை இவ்வழக்கில் அ.சா.2 திட்டமிட்டு சிக்க வைத்துள்ளார் எதிரி எந்த குற்றம் புரியவில்லை நடந்த சம்பவத்திற்கு சாட்சிகள், ஆவணங்கள், வாக்குமூலங்கள், சான்று பொருட்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டுள்ளது அ.சா.2 சம்பவ காலத்தில் அரசியல் அதிகாரமிருந்தவராக இருந்ததால் அவர் காப்பாற்றப்பட்டு எதிரி இந்த வழக்கில் சிக்க வைக்கப்பட்டுள்ளார் எதிரி மீது பொய்யான புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு நான் சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. இறந்துபோன சதீஸ்குமார் மனைவி மற்றும் இரத்த உறவினர்களிடம் புகார் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான் அவர்கள் அந்த நேரத்தில் அங்கில்லை அவரது உறவினர்களை சாட்சியாக விசாரித்துள்ளேன்.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 128/2025**

**Deposition of Witness for Prosecution : P.W. 19**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | V.K. குமார் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 25.02.2026

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் காவல் உதவி ஆய்வாளராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 11.08.2020ந் தேதி மாலை சுமார் 6.30 மணிக்கு வேளாங்கண்ணி காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது வேளாங்கண்ணி மெயின்ரோடு ரவிந்தரா என்பவர் நிலையம் ஆஜராகி முகேஷ் என்பவர் தன்னையும் தனது மகனையும் ஜான்சன் லாட்ஜில் வேலை செய்யும் இன்னொருவரையும் குத்திவிட்டதாக நிலையம் வந்து எழுத்து மூலமான புகாரை பெற்று மேல் அதிகாரிக்கு தகவல் தெரிவித்தும், நிலைய குற்ற எண் 743/2020 சட்டப்பிரிவு 294(b), 307, 302, 506(ii) IPC படி இவ்வழக்கு பதிவு செய்தேன். எனது மேல் அதிகாரிகளுக்கு மேல் விசாரணைக்கு வைத்தேன். என்னால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 என்னிடம் புகார் மனுவை கொடுத்த போது அவரை விசாரித்து தான் வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரில் உள்ள மொத்தம் 3 பக்கங்களில் முதல் இரண்டு பக்கத்தில் அ.சா.1ன் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். புகாரை பெற்ற பிறகு சம்பவ நடந்தாக சொல்லப்படும் இடத்திற்கு நான் சென்றேனா என்றால் சென்றேன். 108 ஆம்புலன்ஸ்க்கு யார் தகவல் கொடுத்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. புகார்தாரர் புகார் மனுவை காவல் நிலையம் வந்த பிறகு அங்கு வைத்து தான் எழுதி எதிரியின் பெயர் குறிப்பிட்டு எழுதி கொடுத்தாரா என்றால் அவர் வரும்போதே எழுதி எடுத்துவந்தார். அ.சா.1க்கு முதல் தகவல் அறிக்கையின் நகல் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. அ.சா.1ன் மகன் சாம்சங் பிராங்களின் மருத்துவமனையில் சேர்ந்த பிறகு அங்கிருந்து தகவல் வருவதற்கு முன்பாகவே அ.சா.1 என்னிடம் புகார் கொடுத்துவிட்டார் அதன் அடிப்படையில் அப்போதே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்டேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நேரம் 11.08.2020 மாலை 6.30 மணிக்கு என்றால் சரிதான். அ.சா.1ன் மகன் சாம்சங் பிராங்களின் என்பவரை காப்பாற்றுவதற்காக அவரின் தூண்டுதலின் பேரில் எதிரியை சம்பந்தப்படுத்தி பொய்யான புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 128/2025**

**Deposition of Witness for Prosecution : P.W. 18**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரகாஷ் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 25.02.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்சமயம் திருக்கண்ணபுரம் காவல் நிலையத்தில் இரண்டாம்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 11.08.2020 அன்று சதீஸ்குமார் வயது 33 த/பெ. மாது காந்திநகர், பெரியகொள்ளம்பட்டி, சேலம் இறந்துபோனவரின் வழக்கை 12.08.2020ந் தேதி நாகப்பட்டினம் அரசு மருத்துவமனை கண்காணிப்பாளரிடம் அனுமதி பெற்று 13.08.2020 மருத்துவர் பாண்டியராஜனிடம் பிரேதத்தை அடையாளம் காண்பித்து இறந்துபோனவர் கருநீல சட்டை, பச்சை கலர் கோடுபோட்ட இரத்தம் தோய்ந்த கிழிந்த அதன் காலரில் ஆலன் சோலியம், கருப்பு கலர் லோயர் பேண்ட் அதன் பாக்கெட் ஓரத்தில் மஞ்சள் கலரில் ேஹாண்டா என்று எழுதப்பட்டதை சேகரிக்கப்பட்டு அதனை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனையின்போது சேகரிக்கப்பட்ட உள்ளுறுப்புகளை 19.11.2020ந் தேதி தஞ்சாவூர் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து அதற்கான ரசீது பெற்று காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன். மேலும் 08.01.2021ந் தேதி தஞ்சாவூர் தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து அறிக்கை பெற்று அதனை

நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். இறந்த சதீஸ்குமாரை அவரது தம்பி சந்தோஷ்குமாரிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

## <u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

11.08.2020 அன்று நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்திற்கு என்னை காவல் ஆய்வாளர் 24.01.2021 அன்று விசாரித்து தான் வாக்குமூலம் பெற்றார் என்றால் சரியல்ல. எந்த தேதியில் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இறந்தவரின் ஆடைகளை நான் மருத்துவமனையில் இருந்து பெற்றுகொள்ளவில்லை ஏற்கனவே போலிசார் தான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றும், காவல் ஆய்வாளர் உயர் அதிகாரி என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 128/2025**

**Deposition of Witness for Prosecution : P.W. 17**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆனந்த் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 25.02.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்சமயம் திட்டச்சேரி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது 11.08.2020 அன்று ரவிந்தரன் த/பெ. ஜெகன் மெயின்ரோடு, வேளாங்கண்ணி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று உதவி ஆய்வாளர் V.K. குமார் என்பவர் வழக்கு பதிவு செய்து வேளாங்கண்ணி காவல் நிலைய குற்ற எண் 743/2020 சட்டப்பிரிவு 294(b), 307, 302, 506(ii) இ.த.ச படி வழக்கு பதிவு செய்தார் முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் மனுதாரரின் அசல் மனு ஆகியவற்றை கனம் நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்றம் நாகப்பட்டினம் அவர்கள் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். நீதிமன்றத்தில் துரித தபால் ஒப்படைத்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கையின் நகல்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முகாம் அலுவலம், மாவட்ட துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலம், மாவட்ட குற்ற பதிவு கூடம் மற்றும் ஆய்வாளர் தணிக்கை அவர்களிடம் ஒப்படைத்து அத்தாச்சி

பெற்று நிலையம் ஆஜரானேன். ஆய்வாளர் என்னை விசாரிக்க நடந்த விபரம் கூறினேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 128/2025**

**Deposition of Witness for Prosecution : P.W. 16**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லூர்துராஜ் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 25.02.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்சமயம் வேளாங்கண்ணி செட்டிதெருவில் வசித்து வருகிறேன். நான் CCTV கேமரா 7, 8 ஆண்டுகளாக வேலை பார்த்து வருகிறேன். நான் எல்லா லாட்ஜ்க்கும் CCTV கேமரா பொருத்துவேன். ஜான்சன் லாட்ஜ்க்கும் நான் தான் CCTV கேமரா பொருத்தினேன். 11.08.2020ந் தேதி மாலை 5.45 மணியளவில் வேளாங்கண்ணி ஆய்வாளர் வேளாங்கண்ணி ஜான்சன் லாட்ஜில் ஒரு கொலை நடந்தது அதன் CCTV கேமராவின் பழைய பேக்கப் எடுத்து தறுமாறு கேட்டுக்கொண்டார். நான் அதை பெண்ட்ரைவ்வில் போட்டு CD ல் எடுத்துக்கொடுத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எந்த ஆண்டு ஜான்சன் லாட்ஜில் CCTV கேமரா பொருத்தினேன் என்றால் 2018ம் ஆண்டில் பொருத்தினேன். எத்தனை CCTV கேமரா பொருத்தினேன் என்றால் 8 கேமராக்கள் பொருத்தினேன். எந்தெந்த இடத்தில் கேமரா பொருத்தினேன் என்றால் ஜான்சன் லாட்ஜின் வரவேற்பு பகுதி மற்றும் அதற்கு பக்கவாட்டில் உள்ள பார்க்கிங் பகுதியில் பொருத்தினேன். நான் CCTV கேமரா பொருத்தியதற்கான

தொகையை பெற்றுக்கொண்டு ரசீது கொடுத்தேனா என்றால் ரசீது கொடுக்கவில்லை தொகையை மட்டும் வாங்கிகொண்டேன் என்றால் சரிதான். CCTV கேமராவை நான் பொருத்தவே இல்லை போலிசார் கொடுத்த வேறொரு CCTV கேமராவில் உள்ள பதிவுகளை நான் பதிவிறக்கம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான்.